# தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம்

எண். 208/2, ஜவஹர்லால் நேரு சாலை, அரும்பாக்கம், சென்னை 600 106
தொலைபேசி எண்: 2363 5011
மின்னஞ்சல் - tnsec.tn@nic.in இணையதளம் - www.tnsec.tn.nic.in

## செய்தி வெளியீடு

செய்தி வெளியீடு : 56 / 2021 நாள்: 02.11.2021

தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையர் முனைவர் வெ,பழனிகுமார் இ.ஆ.ப.,(ஓய்வு) அவர்கள் தலைமையில், விழுப்புரம், காஞ்சிபுரம், கடலூர், திருவண்ணாமலை, வேலூர் மற்றும் இராணிப்பேட்டை ஆகிய மாவட்டங்களில் நகர்ப்புற உள்ளாட்சி தேர்தல்கள் நடைபெறுவது தொடர்பாக மாவட்ட தேர்தல் அலுவலர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர்கள், தேர்தல் நடத்தும் அலுவலர்கள் மற்றும் உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்களுக்கான முன்னேற்பாடு பணிகள் குறித்த மண்டல அளவிலான ஆய்வு கூட்டம் நடைபெற்றது.

நகர்ப்புற உள்ளாட்சி தேர்தல்கள் ஆயத்தப் பணிகள் குறித்து தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையர் முனைவர் வெ.பழனிகுமார் இ.ஆ.ப.,(ஓய்வு), அவர்கள் தலைமையிலும், தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையச் செயலாளர் திருமதி எ. சுந்தரவல்லி, இ.ஆ.ப., அவர்களின் முன்னிலையிலும், விழுப்புரம், காஞ்சிபுரம், கடலூர், திருவண்ணாமலை, வேலூர் மற்றும் இராணிப்பேட்டை மாவட்டங்களின் மண்டல அளவிலான ஆய்வுக்கூட்டம் மற்றும் தேர்தல் நடத்தும் அலுவலர்கள் மற்றும் உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்களுக்கான பயிற்சி இன்று (02.11.2021) பெருநகர சென்னை மாநகராட்சியில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையர் அவர்கள் தெரிவித்ததாவது,

நகர்ப்புற உள்ளாட்சி தேர்தல் நடுநிலையுடனும் பாதுகாப்புடனும் நடைபெற நடுநிலையுடன் பணியாற்ற இருக்கின்ற அலுவலர்களாகிய நாம் அனைவரும் தேர்தல் குறித்த அனைத்து விவரங்களையும் முழுமையாக அறிந்திருக்க வேண்டும். தேர்தலைப் பொறுத்தவரை, வாக்காளர் பட்டியல் மற்றும் வாக்குச்சாவடிப் பட்டியல் தயாரித்தல், தேர்தல் கண்காணிப்புப் பணிகள், தேர்தல் நன்னடத்தை விதிகள், பாதுகாப்பு நடவடிக்கைகள் உள்ளிட்ட பல்வேறு தேர்தல் குறித்த முக்கிய பணிகள் உள்ளன.

..2..

ஆகவே, இந்த ஆய்வுக்கூட்டத்திற்கு வந்துள்ள ஆறு மாவட்டங்களைச் சார்ந்த தேர்தல் நடத்தும் அலுவலர்கள், உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்கள் இக்கூட்டத்தில் அளிக்கப்படும் பயிற்சிகளை முழுமையாக அறிந்து கொண்டு தேர்தல் பணியாற்ற வேண்டும். மேலும் தேர்தல் பணிகள் குறித்து தங்களுக்கு ஏற்படுகின்ற சந்தேகங்களை வெளிப்படுத்தி, இக்கூட்டத்தின் வாயிலாக தெளிவுபடுத்திக் கொள்ள வேண்டும் என தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையர் முனைவர் வெ,பழனிகுமார் இ.ஆ.ப., (ஓ) அவர்கள் தெரிவித்தார்கள்.

இதனைத் தொடர்ந்து, மாவட்டத் தேர்தல் அலுவலர்கள் / மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் மாவட்டக் காவல் கண்காணிப்பாளர்கள் தங்களுடைய மாவட்டங்களில் நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தல் தொடர்பாக மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னேற்பாடு பணிகள் மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்தும் எடுத்துரைத்தார்கள். இக்கூட்டத்தில், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் திரு த. மோகன், இ.ஆ.ப., (விழுப்புரம்), டாக்டர் மா. ஆர்த்தி, இ.ஆ.ப., (காஞ்சிபுரம்), திரு கி. பாலசுப்ரமணியம், இ.ஆ.ப., (கடலூர்), திரு பா.முருகேஷ், இ.ஆ.ப., (திருவண்ணாமலை), பெருநகர சென்னை மாநகராட்சி துணை ஆணையாளர் திரு விசு மகாஜன், இ.ஆ.ப., (வருவாய் (ம) நிதி), மாவட்ட காவல் கண்காணிப்பாளர்கள் திரு சக்தி கணேசன், இ.கா.ப., (கடலூர்), திரு அ. பவன்குமார் ரெட்டி, இ.கா.ப., (திருவண்ணாமலை), கூடுதல் காவல் கண்காணிப்பாளர்கள் திரு கோவிந்தராஜ் (விழுப்புரம்), திரு முத்து கண்ணன், (இராணிப்பேட்டை), காஞ்சிபுரம் மாவட்ட துணை காவல் கண்காணிப்பாளர் (குற்றப்பிரிவு) திரு வி. குலசேகரன், முதன்மை தேர்தல் அலுவலர் (ஊராட்சிகள்) திரு க. அருண்மணி, முதன்மை தேர்தல் அலுவலர் (நகராட்சிகள்) திருமதி கு. தனலட்சுமி, உதவி ஆணையர் (தேர்தல்) திரு அகஸ்ரீ சம்பத்குமார், விழுப்புரம், காஞ்சிபுரம், கடலூர், திருவண்ணாமலை, வேலூர், இராணிப்பேட்டை மாவட்டங்களைச் சார்ந்த நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் தேர்தல் நடத்தும் அலுவலர்கள், உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்கள் மற்றும் ஆணையத்தின் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**(தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணைய ஆணைப்படி)**

2/11/2021

மக்கள் தொடர்பு அலுவலர்